**சுருக்கம்**

பொதுப்பணிகள்— தமிழ்நாடு அமைச்சுப்பணி— மதுரை மாவட்ட வருவாய் அலகு— திரு க.மனோகரசுந்தர் (த/பெ காலஞ்சென்ற திரு.ரா. கண்ணன்) என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது— பணிவரன்முறை செய்து —ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை**
**பணிகள் அலகு, பணி9 (2) பிரிவு**

**அரசாணை (3டி) எண்:169**

**நாள்: 13.08.2020**
**திருவள்ளுவராண்டு 2051**
**சார்வாரி வருடம், ஆடி—29**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.
2. முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண்.ஆகு3/26635/2019, நாள் 09.03.2020.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள் 23.01.2020.

••••••

**ஆணை:—**

மதுரை மாவட்ட வருவாய் அலகில், கிராம உதவியாளராகப் பணியாற்றிய போது 13.09.2013 அன்று பணியிடையே காலமான திரு.ரா. கண்ணன் என்பவரின் மகன், திரு க.மனோகரசுந்தர் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி குறிப்பிட்ட காலவரம்பிற்குள் மனு செய்திருந்தார். தமிழ்நாடு அமைச்சுப்பணியில் கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிநியமனம் பெற அனைத்துத் தகுதிகளையும் தனியர் பெற்றிருந்ததால், மதுரை மாவட்ட வருவாய் அலகில், கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டு, தனியர் 09.11.2018 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளதாகவும், திரு க.மனோகரசுந்தர் என்பவருக்கு தமிழ்நாடு அமைச்சுப் பணியில், மதுரை மாவட்ட வருவாய் அலகில், கருணை அடிப்படையில் 09.11.2018 முற்பகல் முதல் இளநிலை வருவாய் ஆய்வாளர் பதவியில் பணிவரன்முறை செய்ய ஆணை வேண்டி மதுரை மாவட்ட ஆட்சியர், முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையருக்கு முன்மொழிவு அனுப்பியிருந்தார்.

2. மதுரை மாவட்ட ஆட்சியரின் முன்மொழிவினை முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் ஏற்று, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

3. மதுரை மாவட்ட ஆட்சியரின் முன்மொழிவு மற்றும் முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் பரிந்துரை ஆகியவற்றை உரிய ஆவணங்களுடன் அரசு

நன்கு ஆய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், மதுரை மாவட்ட வருவாய் அலகில், கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக தற்காலிகப் பணிநியமனம் செய்யப்பட்ட திரு க.மனோகரசுந்தர் என்பவருக்கு இளநிலை வருவாய் ஆய்வாளர் பதவியில் அவர் பணியில் சேர்ந்த நாளான 09.11.2018 முற்பகல் முதல் அவர் அப்பணியிடத்திற்குத் தேவையான உடல் தகுதியினைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறைசெய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியரின் ஆண்டு ஊதிய உயர்வு / ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் அவற்றை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

4. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் அ.சா.எண். 9878/க்யூ–2/2020–2, நாள் 29.07.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அ.சா.எண்.17920/ஜி2/2020, நாள் 10.08.2020–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அதுல்ய மிஸ்ரா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை–5.
மாவட்ட ஆட்சியர், மதுரை.
திரு க.மனோகரசுந்தர், இளநிலை வருவாய் ஆய்வாளர்.
(மதுரை மாவட்ட ஆட்சியர் மூலமாக)

<u>நகல்</u>

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்(ஜி) துறை, சென்னை–9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர். 13.8.20
13.8.2020
13.8.20